**ஜூலை - 02**

# TNPSC துளிகள்

- போஸ்டான் கன்ஸல்டிங் குரூப் மற்றும் totaljobs.com ஆகியவை இணைந்து நடத்திய ஆய்வின்படி, நியூயார்க், பெர்லின் மற்றும் பார்சிலோனா ஆகிய நகரங்களை விட லண்டன் நகரம், உலகில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மிகவும் விரும்பும் நகரமாக உள்ளது.
    - இதற்கிடையில், நாடுகளுக்கிடையேயான ஆய்வின்படி ஒட்டுமொத்தமாக ஐக்கிய ராஜ்ஜியம் ஐந்தாவது இடத்தில் உள்ளது. ஐக்கிய ராஜ்ஜியம் 2014-ல் இரண்டாவது இடத்தில் இருந்தது.
- பெங்களூருவை அடிப்படையாகக் கொண்ட சுமத்ரா குரூப் என்ற நிறுவனம் மகேந்திரசிங் தோனியைத் தனது முதலாவது நிறுவனத் தூதராக நியமித்துள்ளது. இவர் அந்நிறுவனத்தின் அடையாளமாக அனைத்து தேசியப் பிரச்சாரங்களிலும் பல ஆண்டுகளுக்கு ஈடுபடுவார்.
- அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் உள்ள ஆராய்ச்சியாளர்கள் மிச்சிகன் மைக்ரோ மோட் என்ற சிறிய கணினியை வடிவமைத்துள்ளனர். இது 0.3 மி.மீ * 0.3 மி.மீ என்ற அளவிலும் அரிசி தானியத்தை விட முற்றிலும் சிறிய அளவிலும் உள்ளது.
    - இந்த மிகச்சிறிய சாதனங்களில் ஏற்கெனவே உள்ள நிரலாக்க மற்றும் தரவுகள், இச்சாதனங்கள் அணைந்தவுடன் இவை அனைத்தும் அழிந்துவிடும்.
- தமிழ் நாட்டின் சென்னையில் உள்ள ஒருங்கிணைந்த இரயில்பெட்டித் தொழிற்சாலையானது முதன் முறையாக துருப்பிடிக்காத எஃகுடன் கூடிய 3 கட்ட ஆற்றல் மிக்க மெய்ன்லைன் எலக்ட்ரிக் மல்டிபில் யூனிட் (MEMV-Mainline Electric multiple unit) கொண்ட 8 இரயில் பெட்டிகளை வடிவமைத்து வெளியிட்டுள்ளது.
    - MEMU என்பது புறநகர் இரயில் அமைப்பாகும். இது உள்நகரங்களில் குறைந்த தொலைவு பயணம் செய்யும் பயணிகளின் தேவையை நிவர்த்தி செய்கிறது.
- இந்திய இரயில்வேயானது, மேற்கு மத்திய இரயில்வே, மத்திய இரயில்வே, கிழக்கு இரயில்வே மற்றும் தென் கிழக்கு மத்திய இரயில்வே ஆகிய நான்கு மண்டலங்களிலும் ஆளில்லா லெவல் கிராஸிங்கை (UMLC – Unmanned level crossing) முற்றிலும் நீக்கியுள்ளது. இந்த நான்கு மண்டலங்களும் 11,545 கிலோ மீட்டர்கள் தொலைவுடன் ஆளில்லா லெவல் கிராஸிங் அற்ற அகல இரயில் பாதையாக உருவெடுத்து உள்ளது.

# தேசியச் செய்திகள்

## 9-வது பணித் தலைவர்களின் மாநாடு

- புது தில்லியில் ஜூன் 30 முதல் – ஜூலை 2, 2018 வரை ஒன்பதாவது பணித் தலைவர்களின் மாநாடு (Heads of Mission Conference) நடைபெற்றது. இம்மாநாட்டை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தொடங்கி வைத்தார்.




- மூன்று நாள் நிறைவு மாநாட்டின் கருத்துருவானது ‘முடிவில்லாத எல்லை: இணையற்ற வெளிப்பாடு’.

## முதலாவது டெல்டா தரவரிசை

- நிதி ஆயோக் 108 உயர்லட்சிய மாவட்டங்களுக்கான முதலாவது டெல்டா தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. ஏப்ரல் மற்றும் மே 2018 ஆகிய இரண்டு மாதங்களில் 5 வளர்ச்சிப் பகுதிகளில் அடைந்த முன்னேற்றத்தைக் கணக்கிட்டு இந்தத் தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்த டெல்டா தரவரிசையின் நோக்கமானது உயர்லட்சிய மாவட்டங்களில் உள்ள சக்தி வாய்ந்த அணிகளுக்கிடையே போட்டி உணர்வைத் தூண்டுவதாகும்.
- டாகோட் (குஜராத், தரவரிசை 1வது), மேற்கு சிக்கிம் மாவட்டம் (சிக்கிம், 2வது), இராமநாதபுரம் மாவட்டம் (தமிழ்நாடு, 3-வது), விஜயநகரம் (ஆந்திரப் பிரதேசம், 4-வது) மற்றும் ஓய்எஸ்ஆர் கடப்பா மாவட்டம் (ஆந்திரப் பிரதேசம், 5-வது) ஆகியவை மிகவும் மேம்பட்ட மாவட்டங்களாகும்.
- குப்வாரா (ஜம்மு காஷ்மீர்), பெகுசாராய் (பீகார்), ராஞ்சி (ஜார்க்கண்ட்), சிம்டேகா (ஜார்க்கண்ட்) மற்றும் ஹகாரியா (பீகார்) ஆகியவை முறையே ஒன்று முதல் ஐந்து வரை தரவரிசைப்படுத்தப்பட்ட குறைவான முன்னேற்றமடைந்த மாநிலங்களில் உள்ள உயர் லட்சிய மாவட்டங்களாகும்.

## உலக நிலமதிப்புச் சந்தையின் வெளிப்படைத் தன்மைக்கான குறியீடு

- அண்மையில் வெளியிடப்பட்ட உலக நிலமதிப்புச் சந்தையின் வெளிப்படைத்தன்மைக்கான குறியீட்டில் 100 நாடுகளைக் கொண்ட தரவரிசைப் பட்டியலில் இந்தியா 35-வது இடத்தில் உள்ளது. (GRETI – Global Real Estate Transparency Index)
- சந்தை அடிப்படைகள், கொள்கைச் சீர்திருத்தங்கள் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டில் தாராளமயமாக்கல் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் காரணமாக இந்தியா இந்தக் குறியீட்டில் ஒரு படி முன்னேறியுள்ளது.

- இந்தக் குறியீட்டை ஜெஎல்எல் நிலமதிப்பு நிறுவனம் வெளியிட்டுள்ளது. ஆண்டுக்கு இரு முறை கணக்கிடப்படும் இந்த ஆய்வில் 2016-ல் இந்தியா 36வது இடத்தில் இருந்தது. 2014-ல் இந்தியாவின் தரவரிசை 40 ஆக இருந்தது.


| 2018 Rank | Market | Region | Investment Performance | Market Fundamentals | Listed Vehicles | Regulatory and Legal | Transaction Process | Sustainability | 2018 Composite Score |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | United Kingdom | EUR | 1.0 | 1.8 | 1.0 | 1.2 | 1.1 | 1.9 | 1.2 |
| 2 | Australia | AP | 1.2 | 1.6 | 1.1 | 1.4 | 1.1 | 1.6 | 1.3 |
| 3 | United States | AM | 1.1 | 1.6 | 1.0 | 1.4 | 1.4 | 2.4 | 1.4 |
| 4 | France | EUR | 1.6 | 1.7 | 1.3 | 1.5 | 1.0 | 1.0 | 1.4 |
| 5 | Canada | AM | 1.7 | 1.6 | 1.2 | 1.2 | 1.2 | 2.0 | 1.5 |
| 6 | Netherlands | EUR | 1.7 | 1.4 | 1.4 | 1.4 | 1.2 | 2.1 | 1.5 |
| 7 | New Zealand | AP | 1.8 | 1.6 | 1.0 | 1.6 | 1.0 | 3.0 | 1.6 |
| 8 | Germany | EUR | 2.2 | 2.0 | 1.2 | 1.8 | 1.4 | 2.7 | 1.9 |
| 9 | Ireland | EUR | 2.4 | 2.3 | 1.3 | 1.6 | 1.0 | 3.4 | 1.9 |
| 10 | Sweden | EUR | 2.0 | 2.8 | 1.3 | 1.6 | 1.5 | 2.7 | 1.9 |

- ரியல் எஸ்டேட் சந்தையில் இந்தியா தற்போது அரை வெளிப்படைத்தன்மை மண்டலத்தில் உள்ளது.
- ஐக்கிய ராஜ்ஜியம் (1-வது), ஆஸ்திரேலியா (2-வது), அமெரிக்கா (3-வது) பிரான்ஸ் (4-வது) மற்றும் கனடா (5-வது) ஆகிய நாடுகள் முதல் 5 இடத்தில் உள்ளன.
- வெனிசுலா (100-வது), லிபியா (99-வது), செனேகல் (98-வது), மொசாம்பிக் (97-வது) மற்றும் ஐவரி கோஸ்ட் (96-வது) ஆகியவை மோசமான செயலாக்கம் கொண்ட நாடுகளாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## “Reunite” செயலி

- இந்தியாவில் காணாமல் போன மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளை பின்தொடர மற்றும் அடையாளம் கான ‘Reunite’ என்ற கைபேசி செயலியை வர்த்தகம் மற்றும் தொழில்துறை மற்றும் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் அறிமுகப்படுத்தியிருக்கிறார்.




- நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தியின் பச்பன் பச்சோ அந்தோலன் என்ற அரசு சாரா நிறுவனம் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனமான கேப்ஜெமினி ஆகியவை இணைந்து இச்செயலியை வடிவமைத்துள்ளது.
- இது காணாமல் போன குழந்தைகளை அடையாளம் காண அமேசான் ரிகோநிஷன் (Amazon Rekognition) என்ற வலை அடிப்படையிலான முகத்தை அடையாளம் காணுதல் சேவையைப் பயன்படுத்துகிறது.
- இந்தச் செயலியில் பதிவேற்றம் செய்யப்படும் புகைப்படமானது, கைபேசியில் உள்ள இயற்பியல் நினைவகத்தில் சேமிப்பாகாது.

# மாநிலச் செய்திகள்

## 'பானி பச்சாவோ, பைசே கமாவோ'

- நிலத்தடிநீர் அளவு குறைவைச் சரிபார்க்க பஞ்சாப் அரசு 'பானி பச்சாவோ, பைசே கமாவோ' என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டம் இரண்டு திரளாக/ஊட்டமாக செயல்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இது பம்பிவால் மற்றும் நவாஜிபூர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் சோதனை முயற்சியாக செயல்படுத்தப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், குழாய் கிணறுகளை குறைவாகப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு பண உதவி அளிக்கப்படும்.

## 'கழிப்பறை இல்லை, மணப்பெண் இல்லை'

- பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலனை உறுதிபடுத்த ஹரியானாவின் கொடிக்கன் கிராம பஞ்சாயத்தின் சர்பஞ்ச், தர்மபால் தலைமையில் "கழிப்பறை இல்லை, மணப்பெண் இல்லை' என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.
- நாட்டில் முதல் பஞ்சாயத்தாக கொடிக்கன் பஞ்சாயத்து, எந்த குடும்பத்தில் கழிப்பறை வசதி உள்ளதோ அந்தக் குடும்பத்தில் மட்டுமே பெண்களை மணம் செய்வது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.



No Toilet No Bride

- இதன் நோக்கம் பெண் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை பாதுகாப்பது ஆகும். திறந்த வெளியில் மலம் கழிக்காத பஞ்சாயத்தாக (ODF – Open defecation Free) ஏற்கெனவே கொடிக்கன் பஞ்சாயத்து அறிவிக்கப்பட்டுள்ளது.

## மிதக்கும் சூரிய ஆற்றல் ஆலைக்கான ஆய்வுக் குழு

- மஹாராஷ்டிரா அரசானது சோலாப்பூர் மாவட்டத்தில் உள்ள உஜானி அணையில் 1000 மெகாவாட் திறனுள்ள மிதக்கும் சூரிய ஆற்றல் ஆலையின் வளர்ச்சி தொடர்பான பிரச்சனைகளை ஆய்வு செய்ய ஆய்வுக் குழு ஒன்றை அமைத்துள்ளது.
- இக்குழு மஹாராஷ்டிர மாநில மின்சார வழங்கல் நிறுவனத்தின் இயக்குநர் சதீஷ் சவான் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டத்தால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் அணையின் நீர்மட்டத்தை மாதம் வாரியாக கண்காணித்தல் ஆகிய பல பணிகளை இக்குழு மேற்கொள்ளும்.
- உஜானி மும்பையில் இருந்து 300 கி.மீ. தொலைவில் சோலாப்பூர் மாவட்டத்தின் மாதாத் தாலுகாவில் அமைந்துள்ளது. மஹாராஷ்டிரா மாநிலத்தின் அணைகளில் பெரிய அணையாக இந்த அணை உள்ளது.

## மகப்பேற்று இறப்பைக் குறைத்ததற்கு மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு விருது

- பிரதம மந்திரியின் பாதுகாப்பான தாய்மை பிரச்சாரத்தின் கீழ் (PMSMA – Pradhan Mantri Surakshit Matrifva Abhiyan) மகப்பேற்று இறப்பைக் குறைத்ததற்காக மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலவாழ்வு அமைச்சகம் மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு விருது வழங்கியுள்ளது.
- இந்தியப் பதிவாளர் ஜெனரல் (Registrar General of India) அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் 2014 முதல் 2016 வரை மத்தியப் பிரதேசத்தில் முன் எப்போதும் இல்லாத அளவாக மகப்பேற்று இறப்பு 48 ஆகக் குறைந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இதற்காக அம்மாநிலத்திற்கு இவ்விருது வழங்கப்பட்டது.
- மத்தியப் பிரதேசத்தில் மகப்பேற்று இறப்பு விகிதம் 2011-13-ல் 221 ஆக இருந்தது. இது தற்பொழுது 173 ஆகக் குறைந்துள்ளது.
- இது மாநிலத்தில் கடைசி மூன்று ஆண்டுகளில் 22% மகப்பேற்று இறப்பு விகிதம் குறைந்துள்ளதைக் காட்டுகிறது.
- கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள அரசு சுகாதார மையங்கள் மற்றும்

மருத்துவமனைகளில் கருவுற்ற பெண்களுக்கு இலவச மருத்துவ பரிசோதனை செய்ய மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வு அமைச்சகம் PMSMA என்ற திட்டத்தைத் தொடங்கியது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இடம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் பொது இயக்குநர்

- ஐ.நா.வின் இடம் பெயர்வு நிறுவனமான, இடம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் அடுத்த பொது இயக்குநராக போர்ச்சுக்கலின் அண்டோனியோ மேனுவல் டி கார்வெல்கோ பெரியிரா விட்டோரினா (61) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- தற்போது பதவியில் உள்ள பொது இயக்குநர் வில்லியம் லேசி சுவிங் ஆவார். இவர் இரண்டாவது முறையாக ஐந்து ஆண்டுகளுக்கான பணியை நிறைவு செய்ய உள்ளார் இப்பதவிக்கு அண்ட்டோனியோ மேனுவல் டி கார்வெல்கோ பெரியிரா விட்டோரினா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.




- இடம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் உயரிய பதவிக்கான தேர்தலில் (இரகசிய வாக்கெடுப்பின் மூலம்) விட்டோரினோ கோஸ்டா ரிக்காவின் லாரா தாம்சன் மற்றும் அமெரிக்காவின் கென் ஐசக்சை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார். இவர்கள் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாம் இடம் பிடித்துள்ளனர்.
- IOM (International Organisation for Migration) ஆனது ஐ.நா.வின் இடம் பெயர்வு நிறுவனம் ஆகும். இதன் தலைமையிடம் சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவா ஆகும்.
- இரண்டாம் உலகப் போரில் இடம் பெயர்ந்த மக்களை மறுகுடியமர்த்த 1951-ல் ஐரோப்பிய குடியேற்றத்திற்கான அரசுகளுக்கிடையேயான குழுவாக (ICEM-Intergovernmental Committee for European Migration) தொடங்கப்பட்டது.
- ஐ.நா. பொது அவைக்கான பார்வையாளர் அந்தஸ்து 1992-ல் IOM-ற்கு வழங்கப்பட்டது. ஐ.நா மற்றும் இடம் பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஆகியவற்றிற்கிடையேயான கூட்டுறவு ஒப்பந்தம் 1996-ல் கையெழுத்தானது.

# விளையாட்டுச் செய்திகள்

## 2018-ன் ஐசிசி பெண்கள் உலக T20

- 2018 ஆம் ஆண்டுக்கான ஐசிசி பெண்கள் உலக இருபது 20 கிரிக்கெட் போட்டியை மேற்கிந்திய தீவுகள் இவ்வாண்டு நவம்பர் 9 முதல் 24, 2018 வரை நடத்துகிறது.




- முதல்நிலை ஆட்டங்கள் செயின்ட் லூசியாவில் உள்ள கயானா தேசிய விளையாட்டு அரங்கம் மற்றும் டேரன் சாமி விளையாட்டு அரங்கத்திலும், அண்டிகுவாவில் உள்ள சர் விவியன் ரிச்சர்ட்ஸ் விளையாட்டு அரங்கிலும் நடைபெறும்.
- பார்படாவில் இரண்டு அரை இறுதி ஆட்டங்கள் மற்றும் இறுதி ஆட்டம் நடைபெறும்.
- 2016-ல் கொல்கத்தாவில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்றது. அந்தப் பட்டதைத் தக்க வைத்துக்கொள்ளும் முனைப்புடன் மேற்கிந்தியத் தீவுகள் இந்தப் போட்டியை நடத்தும்.

- - - - - - - - - - - - - - -